[2003 ஜனவரி 28

16—

மின் உற்பத்தி

***20227—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு உடுமலைப்பேட்டை பகுதியில் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் காற்று சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வந்துள்ளது. இதற்காக 67 காற்று அளவிடும் நிலையங்கள் நிறுவப்பட்டு, காற்றின் வேகம் பதிவு செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அந்த இடங்கள் காற்றாலைப் பண்ணைகள் நிறுவுவதற்கு உகந்ததாக அறிவிக்கப்படுகிறது. அவற்றில் ஒன்று உடுமலைப்பேட்டை தாலுகாவில் அந்தியூரில் நிறுவப்பட்டது. அங்கு காற்றின் வேகம் மணிக்கு 19.1 கி.மீ. என்று நிர்ணயிக்கப்பட்டு அந்த இடம் காற்றாலைப் பண்ணை நிறுவுவதற்கு உகந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தனியார் முதலீட்டாளர்களால் இதுவரை 74 காற்றாலை இயந்திரங்கள் மூலம் 27 மெகாவாட் மின்சாரம் தயாரித்து மின் கட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை தாலுகாவில் மொத்தமாக எடுத்துக்கொண்டால் 547 காற்றாலை இயந்திரங்கள் நிறுவப்பட்டு 154 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இது தமிழ்நாட்டின் மொத்தத் திறனான 860 மெகாவாட்டில் 17 விழுக்காடு ஆகும். ஆகவே உடுமலைப்பேட்டை பகுதி, தனியார் முதலீட்டாளர்கள் காற்றாலைப் பண்ணைகள் நிறுவுவதற்கு மிக உகந்த இடமாக உள்ளது. ஆகவே இந்தப் பகுதியில் காற்று சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

மேலும் உடுமலைப்பேட்டை தாலுகாவில் உபரி தாவரக் கழிவுகளின் அளவை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஆய்வு செய்து, அங்கு

2003 ஜனவரி 28]
9 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உள்ளது என மதிப்பீடு செய்துள்ளது. இதனடிப்படையில் தனி நபர்கள் புதிய திட்டம் தயாரித்து மின் உற்பத்தி செய்ய முன் வந்தால் அரசு உதவிகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடுமலைப்பேட்டை பகுதியிலே தனியார் காற்றாலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன; அரசு மூலமாக செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை என்று கூறினார்கள். இருப்பினும் தமிழ்நாட்டில், காற்றாலைகள், காற்று மூலமாக மின் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலைப் பண்ணைகள் பெருகி உள்ளன. இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பகுதியைப்போல எங்கள் பகுதியிலும் அதிகமான யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலை இயந்திரங்களை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை மூலம் என்னுடைய தொகுதியிலுள்ள நாவடப்பு, தளிஞ்சி, மஞ்சப்பட்டி போன்ற மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற கிராமப் பகுதிகளைப் புதுப்பிக்கக்கூடிய வகையிலே சோலார் விளக்கு, சூரிய ஒளி பம்ப் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய சக்தியைப் பயன்படுத்துவது பற்றிக் கூறும்போது, சூரிய ஒளி மின்சாதனங்களான லாந்தர்கள், வீட்டு விளக்குகள், தெரு விளக்குகள் ஆகியவற்றை தொலைதூரப் பிரதேசங்களில் பயன்படுத்த நல்ல சாத்தியக்கூறுகள் உள்ளன. அதேபோல் சூரிய வெப்ப சக்தியை, விவசாய உற்பத்திப் பொருள்களான தானியங்கள், பழ வகை ஆகியவற்றை உலர்த்துவதற்குப் பயன்படுத்தலாம். தனியார் முதலீட்டாளர்கள்...

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU

[2003 ஜனவரி 28

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதிலுரையை முடிக்கிற வரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: சூரிய வெப்ப சுடுகாற்று அல்லது உலர வைக்கும் அமைப்புகளை நிறுவ முன்வருவார்களேயானால், அதற்காக தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், அந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் தர தேவையான உதவிகளை அளிக்கும். மேலும் சூரிய சக்தியிலிருந்து மின்சாரமும் தயாரிக்க முடியும். ஆனால் அதற்குக் கூடுதல் செலவாகிறது. ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ரூ.10 செலவாகிறது. ஆனாலும் மேற்கூரையில் சோலார் மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் தயாரித்து, மின் விளக்குகள் மற்றும் கம்ப்யூட்டர்கள் இயங்கப் பயன்படுத்தலாம். ஒரு கிலோவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்கு ரூ.3.50 இலட்சம் செலவாகும். வணிகம் அல்லாத நிறுவனங்களுக்கு இந்த மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு 50 விழுக்காடு மானியம் 2001-2002 வரை வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஞ்சிய வினாக்கள் பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) ஆளுநர் உரையின் தமிழாக்கம்–அவையில் வாசிக்காதது

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....